A consumer is the important visitor on our premises.
He is not dependent on us.  We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806,  044-2953 5816    Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com    Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 15 / 2021</u>**

திரு. M. ஷாஜஹான்,
பிளாட் எண். 12A,
வில்லாபுரம் ஹவுசிங் போர்டு,
வில்லாபுரம், மதுரை – 12.
. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. M. ஷாஜஹான்)

எதிர்

செயற்பொறியாளர்/மேற்கு/பெருநகர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அரசரடி துணை மின் வளாகம்,
AA ரோடு, அரசரடி, மதுரை – 625 016.
. . . எதிர்மனுதாரர்
(திரு. O.K. பிரகாஷ்பாபு, செயற்பொறியாளர்/மேற்கு/பெருநகர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 29–01–2021</u>**

**<u>கேட்புரை நாள்: 11–03–2021</u>**

**<u>ஆணை நாள் :  07–09–2021</u>**

29.01.2021 அன்று பெறப்பட்ட திரு. M. ஷாஜஹான், பிளாட் எண். 12A, வில்லாபுரம் ஹவுசிங் போர்டு, வில்லாபுரம், மதுரை – 12 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 15/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.03.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 066–010–3393ல் கூடுதல் மின்பளு உபயோகத்திற்காக விதிக்கப்பட்ட தொகையை ரத்து செய்ய கோரி விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலை மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதல் மின்பளு உபயோகப்படுத்தியதாக விதிக்கப்பட்ட தொகையை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 தமிழ்நாடு அரசாங்கத்தின் தடை உத்தரவு கடுமையாக அமல்படுத்தியதால் 10/2018 மாதத்திலேயே உற்பத்தி குறைந்த காரணத்தால் 12/2018 மாதத்திலிருந்து இன்று வரை தொழிற்சாலை இயங்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆனால் கூடுதல் மின்பளு பயன்படுத்தியதாக விதிக்கப்பட்ட தொகை 10/2018 வரையிலான மாத மின் கணக்கீடு வரை தொழிற்சாலை இயங்கிய காலத்திற்கு உட்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனக்கு விதிக்கப்பட்ட தணிக்கை தொகையை ரத்து செய்ய கோரி மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின்பகிர்மான வட்டம்/மாநகரத்தை 06.10.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின்பகிர்மான வட்டம்/மாநகரம் 18.12.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு** –

மதுரை மின்பகிர்மான வட்டம்/மாநகரம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **18.12.2020** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு:</u>*

*மனுதாரர் தனது மின் இணைப்பு எண் **066–010–3393** வீதப்பட்டி III(A)1 ற்கு கூடுதல் மின்பளு உபயோகத்திற்காக விதிக்கப்பட்ட தொகையை ரத்து செய்ய கோரிய புகார் மனு தொடர்பாக இருதரப்பு வாதங்கள், மீட்டரின் CMRI தரவிறக்கப் பதிவுகள் மற்றும் MRT அறிக்கை ஆகிய ஆவணங்களை கொண்டு ஆய்வு செய்ததில் மேற்படி மின் இணைப்பு பெறப்பட்ட பிறகு முதல் கணக்கீட்டு மாதமான **8/2018** மாதத்திலேயே அனுமதிக்கப்பட்ட மின்பளுவான **4.95** KW விட அதிகபட்ச மின்பளுவாக **28.07.2018** அன்று **14.06** KWம் மற்றும் அதற்கு அடுத்த கணக்கீட்டு மாதத்தில் **06.09.2018** அன்று **13.08** kw பயன்படுத்தப்பட்டுள்ள விபரம் மின்இணைப்பு மீட்டரின் DATA, CMRI மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட MRT அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*TNERC Determination of Tariff for generation and distribution order in TP No. 1 of 2017 dt 11.08.2017 with effect from 11.08.2017 ல் வரையறுக்கப்பட்ட **6.2.11** விதியின் படி வீதப்பட்டி IIIA1ற்கு அதிகபட்சமாக **12** KW மின்பளு வரை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி **5(2)(**III)(A)–ன்படி "When the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times.*

*(A) In case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill" என்று வரையறுக்கப்பட்டுள்ளது.*

*மேற்படி மின் இணைப்பில் பயன்பாட்டு மின்பளு TP.No.1 of 2017 dt. 11.8.2017 **6.2.11** விதியின் படி வீதப்பட்டி IIIA1 ற்கு வரையறுக்கப்பட்ட அதிகபட்ச மின்பளுவான **12** KW க்கும் கூடுதலாக இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதால் TNERC மின்வழங்கல் விதி 5(2)(III)(A) –ன் கூடுதல் மின்பளுவை முறைப்படுத்தி மேற்படி மின் இணைப்பினை வீதப்பட்டி III(B) க்கு மாற்றம் செய்திடவும், மேற்படி மின் இணைப்பிற்கு முதுநிலை கணக்கீட்டு அலுவலர் / மத்திய அலுவலகம் / மதுரை அவர்களால் **10/2018** கணக்கீட்டு மாதம் முதல் **10/2020** கணக்கீட்டு மாதம் வரை கணக்கிடப்பட்ட ரூ.**25,510/–** நுகர்வோர் செலுத்த வேண்டும் என இம்மன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. அதனை தொடர்ந்து வரும் கணக்கீட்டு மாதங்களுக்கும்*

*வீதப்பட்டியல் III(B) ன் படி வசூலிக்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும் செயற்பொறியாளர் / பகிர்மானம் / மேற்கு / பெருநகர் / மதுரை அவர்களுக்கு இம்மன்றம் உத்தரவிடுகிறது.*

*மனுதாரர் இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் நிலுவை தொகையான ரூ.25,510/– செலுத்த இம்மன்றம் உத்தரவிடுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.03.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. M. ஷாஜஹான் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. O.K. பிரகாஷ்பாபு, செயற்பொறியாளர்/மேற்கு/பெருநகர், மதுரை மின்பகிர்மான வட்டம்/மாநகரம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

5.1 மேல்முறையீட்டாளர் மேற்படி விலாசத்தில் விதப்பட்டியல் III A1 ல் மின் இணைப்பு எண். 05–006–010–3393 ஐ 18–6–2018–ல் பெற்று கட்டப்பை (NON-OVERNBAGS) தயாரிக்கும் தொழிற்சாலைக்கு 4.95 KW பெற்று பயன்படுத்தி வருவதாகவும், வங்கியில் சிறு தொழில் கடன் வாங்கி (NON-OVERNBAGS) தயாரிக்கும் தொழில் மின் இணைப்பு III A1 இல் பெற்று இரண்டு மாதத்தில் மின் கட்டணம் (நான்கு மாதம்) மட்டுமே தொழிற்சாலையை இயங்கியதாகவும், அதன் பிறகு தமிழ்நாடு அரசால் இந்த தொழிலுக்கு தடை ஏற்படுத்திய

காரணத்தால் இன்றுவரை இந்த தொழிற்சாலையை இயக்கவே இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5.2 12/2018 வரை இரு மாதத்திய பயனீட்டு அளவு 120 யூனிட் முதல் 170 யூனிட் வரை லைட்டிங் மட்டும் தான் உபயோகம் உள்ளதாகவும், இதிலிருந்தே தொழிற்சாலை இயங்கவில்லை என்பது தெளிவாக தெரியவருவதாகவும் தற்போது மெஷினரி, தையல் மிஷின் அனைத்தையும் கழற்றிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 சர்வீஸ் வாங்கிய 18/6/2018 க்கு பிறகு 08/2018 இல் மிஷினரி மற்றும் மோட்டார் அனைத்தையும் பிட்டிங்க் செய்து டெஸ்டிங் வேலைகளும் நடந்து தயாரிப்பு பணிகளை துவக்கிய பிறகு தமிழ்நாடு அரசாங்கத்தின் தடை உத்தரவு கடுமையாக அமல்படுத்தியதால் அடுத்த 10/2018 மாதத்திலேயே உற்பத்தி குறைந்த காரணத்தால் மின் பயனீட்டளவு 08/2018 மற்றும் 10/2018 மாதத்திலிருந்து மின்பயன்பாடு இருந்ததாகவும் அதன்பிறகு 12/2018 மாதத்திலிருந்து இன்று வரை தொழிற்சாலை இயங்கவில்லை எனவும், இதை மேல்முறையீட்டாளர் பலமுறை முறையிட்டும், CGRF இல் முறையிட்டும் கூட பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவே இல்லை என்றும், இதை மாதாந்திர மின் பயனீட்டளவை சீர்தூக்கிப் பார்க்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மின்சார வாரியம் முதலில் 2/2020 மாதத்தில் இரண்டாவது தடவையாக கூடுதல் மின் பளு பயன்படுத்தியதாகக் கூறி கூடுதல்மின் பளுகட்டணம் ரூ.17,807/– ஐ கட்டச்சொல்லிய மின்சார வாரியம், தான் மின்சாரமே பயன்படுத்தவில்லை என்று தன்னுடைய 21–3–2020 மற்றும் 19–5–2020 கடிதத்திற்கு பிறகு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் 26–5–2020 அன்று மேற்பார்வை மின் பொறியாளர்/மதுலை மின் பகிர்மான வட்டம்/ பெருநகர் அவர்களுக்கு மனு செய்த பிறகு அவர்களின் உத்திரவின்படி 27.5.2020 அன்று MRT பிரிவினரால் தன் மின் இணைப்பில் பொருத்தியுள்ள மீட்டரில் பதிவான விபரங்களை CMRI மூலம் பதிவிறக்கம் செய்து மீட்டரில் 10/2018 மாதத்திலேயே 13.08 KW மின்பளு பதிவானதாகவும், மின் கணக்கீட்டாளர் ரீடிங் குறிக்கும் பொழுது தவறுதலாக 0.4 KW என குறித்துவிட்டதாகவும், 10/2018 மாதத்திலிருந்து கூடுதல் மின் பளு கட்டணம் ரூ.39,459/– ஐ செலுத்தச் சொல்லி சுமார் 21 மாதங்கள் கழித்து (after thought) ஆக நோட்டீஸ் கொடுத்திருப்பது CGRF உத்தரவில் குறிப்பிட்டுள்ள மின்வழங்கல் விதி எண் 5(2)(III)A இன்படி தவறாகும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.5** ஏனென்றால் இரண்டாவது தடவையாக மின் பளு கூடிய நிகழ்வுகளுக்கு பிறகு ஒரு மாதத்திற்குள் கூடுதல் மின் பளு கட்டணம் வசூல் செய்திருக்க வேண்டும் எனவும் மின்சார வாரியம் இந்த மின் பளு (லோடு) கூடுதலாக பயன்படுத்தியது குறித்து எந்தவிதமான முன்னறிவிப்பு நோட்டீஸ் எதுவும் கொடுக்காமல் அவர்கள் செய்த தவறினை மறந்து நுகர்வோர்களை பழிதீர்த்துக் கொள்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.6** இதை இவர்கள் குறையாக 12/2018 ஆம் மாதத்திலேயே தெரிவித்திருந்தால் இந்த தொழிலை நடத்த முடியாத காரணத்தினால் மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிப்பு செய்திருப்பேன் என்றும், ஏனென்றால் இந்த மின் இணைப்பில் 12/2018 ஆம் மாதத்திலிருந்தே மின் பயனீட்டளவு 100 முதல் 170 யூனிட் அளவிற்கு தான் பயன்படுத்தி வந்துள்ளதாகவும் அதுவும் லைட்டிங் பயன்பாடு மட்டுமே இருந்ததாகவும், CGRF இல் தெரிவித்திருந்தும் கூட அதை அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவே இல்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.7** தான் மின் இணைப்பு பெற்று தொழில் தொடர்ச்சியாக நடத்தி வந்திருந்தால் கூட தனக்கு இந்த தொகையை கட்டுவதற்கு சிரமமே இருந்திருக்காது எனவும், ஆனால் மின் இணைப்பு பெற்று தொழிற்சாலையையே நடத்தாத பொழுது, ஏற்கனவே நஷ்டம் அடைந்த தன்னை இவ்வளவு பெரிய தொகையை கட்டச்சொல்லிய மின்சார வாரியம் தனக்கு தேவையற்ற சுமையை கட்ட சொன்ன பிறகு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திலாவது நிவாரணம் கிடைக்கும் என்று நினைத்தால் அங்கேயும் கூட கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்து கொள்ளாமல், வாரியம் செய்த தவறிணை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு கிடைக்கப் பெற்றது தனக்கு மிகுந்த வருத்தத்தினை அளிப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.8** ஏற்கனவே மெஷினரி மற்றும் மோட்டார்கள் வாங்கி வொயரிங் செய்து மின் இணைப்பு பெற்று முதலீடு போட்டு தொழில் நடத்த முடியாமல் தான் நஷ்டமடைந்துள்ளததகவும், இந்நிலையில் பயன்படுத்தாத மின்சாரத்திற்கு கூடுதல் மின் பளு கட்டணம் எனக்கூறி முதலில் ஒரு தொகையை கட்டச் சொல்லி தெரிவித்து பின் அதன் பிறகு அதைபோல இன்னொரு மடங்கு கூடுதலாக கட்டச் சொல்லி தெரிவித்து அதை சீர்தூக்கி பார்க்காமல் CGRF இல் ஒரு திருத்தம் செய்து ரூ.25,510/– ஐ கட்டச் சொல்லி இருப்பது சட்டவிதிகள் TNERC Supply Code 5(2) (III) (a) இன் படி தவறு என்றும், இந்த நடவடிக்கை மின்சார வாரியத்தினுடைய after thought ஆகவே எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், மேலும்

Difference in Fixed charges not eligible to claim by Licensee without revising the sanctioned demand to the level of recorded demand over and above the sanctioned demand என மேல்முறையீட்டு எண் 10/2019–ல் மேன்மை மிகு மின்குறை தீர்ப்பாளர் அவர்களால் தீர்ப்புரை கூறப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மின்சாரவாரியத்திலிருந்து இரண்டு தடவை வந்த பொறியாளர்கள், பணியாளர்கள், அலுவலர்கள் அனைவரும் தொழிற்சாலைக்கு வெளியே உள்ள மீட்டரை மட்டுமே ஆய்வு செய்தும் மற்றும் மீட்டரில் பதிவான விவரங்களை CMRI மூலம் பதிவிறக்கம் செய்து சென்றவர்கள் யாரும் தொழிற்சாலைக்குள்ளே வந்து இயங்கவே இல்லை என்பதை ஆய்வு **செய்யவில்லை** எனவும், தொழிற்சாலைக்குள்ளேயே யாரும் வரவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேலும் மேன்மை மிகு மின்குறை தீர்ப்பாளர் அவர்களின் மேல்முறையீட்டு எண்.58/2017 தீர்புரையில் பத்தி எண் 9–12, 9–13 மற்றும் 9–14 ன் படி முறையான அறிவிக்கை எதுவுமின்றி மின் நுகர்வோரிகளிடமிருந்து மிகை மின் பளுவிற்கான கூடுதல் மின் கட்டணம் பெறுவது ஏற்புடையதாக இல்லை. மேலும் அவ்வாறு முறைப்படி அறிவிக்கை செய்யாத நேர்வில் அவர் தாழ்வழுத்த மின் கட்டண பட்டியல் IIIA(1) லேயே தொடர்வதாக தான் கருதவேண்டும் எனவும் தீர்ப்புரை கூறப்பட்டுள்ளதாகவும் மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் விதிக்கப்பட்ட தணிக்கை தொகையையும் ரத்து செய்து தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 எனவே மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்தரவை தள்ளுபடி செய்து ரத்து செய்ய வேண்டுமென மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>**

6.1 மனுதாரர் திரு.M. ஷாஜகான் அவர்களுக்கு 18.6.2018 அன்று மின் இணைப்பு எண் 066–010–3393 வீதப்பட்டி III(A) ல் 4.95 KW மின் பளு அனுமதிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டது. மேலும், மேற்படி மின் இணைப்பினை நான்கு மாதம் மட்டுமே பயன்படுத்தியதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். நான்கு மாதங்களுக்குப் பிறகு தனது தொழிற்சாலை இயங்கவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் பிரிவு அலுவலகத்திற்கு மனுதாரர் மின்பயன்பாடு இல்லாமல் உள்ளது என்பதை தெரிவிக்கவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.2** மேற்படி மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளு **4.95** KW விட அதிகமாக **08/2018** ம் மாத மின்கணக்கீட்டின் போது **14.06** KW ம், அதன் பிறகு **10/2018**ம் மாத கணக்கீட்டின் போது **13.80** KWம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை CMRI பதிவிறக்க பதிவுகளின் படி கண்டறியப்பட்டது. மேலும், மனுதாரர் **10/2018** ற்கு பிறகுதான் தனது உற்பத்தியை குறைத்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி மின்இணைப்பிற்கு மின்பளு அதிகம் பயன்படுத்தியது **31.10.2018** வரையிலான **10/2018**ம் மாத மின்கணக்கீடு வரை தொழிற்சாலை இயங்கிய காலத்திற்கு உட்பட்டதாகும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.3** மனுதாரர் தனது மின் இணைப்பிற்கு அதிக மின்பளு கட்டணம் செலுத்த கூறுவதாக குறிப்பிட்டு மேற்பார்வை பொறியாளர் பெருநகர் மின்பகிர்மான வட்டம் / மதுரை அவர்களிடம் புகார் மனு அளித்ததை தொடர்ந்து மேற்படி மின் இணைப்பில் இருந்த AVON தயாரிப்பு **10–60**A வரிசை எண் **2622228**ன் பதிவுகள் CMRI மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது. மேற்படி மின்இணைப்பில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பதிவுகளின் படி **08/2018**ம் மாத மின்கணக்கீட்டின் போது **14.06** KWம் அதன் பிறகு **10/2018** ம் மாத கணக்கீட்டின் போது **13.80** KW ம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை CMRI பதிவிறக்க பதிவுகளின் படி கண்டறியப்பட்டு மீட்டரின் பதிவுகள் பெறப்பட்டதும் அதன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என **11.6.2020** நாளிட்ட உதவி மின்பொறியாளர் அவர்கள் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.4** பதிவிறக்க அறிக்கை பெறப்பட்டதும் மேற்படி மின் இணைப்பில் ஏற்கனவே **08/2018** மற்றும் **10/2018** ஆகிய அடுத்தடுத்த கணக்கீட்டு மாதங்களில் ‘‘பதிவான Demand”, “sanction demand”-ஐ விட அதிகமாக பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 5(2)(III)(A) -ன்படி “When the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times (A) in case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill” என்று வரையறுக்கப்பட்டுள்ள விதியின் படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வீதப்பட்டி III(A)ல் அனுமதிக்கப்பட்ட மின்பளுதொடர்பாக TNERC Tariff Regulation TP.No.1 dt. 11.8.2017 ல் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

*“TNERC Determination of Tariff for generation and distribution order in TP.No.1 of 2017 dt. 11.8.2017 with effect from 11.8.2017 ல் வரையறுக்கப்பட்ட 6.2.11 விதியின் படி, வீதப்பட்டி IIIA1ற்கு அதிகபட்சமாக 12 KW மின்பளுவரை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.”*

TNERC மற்றும் Tariff Regulation ல் வரையறுக்கப்பட்ட விதிகளின் படியும் MRTயிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் மேற்படி மின் இணைப்பினை வீதப்பட்டி III(A) லிருந்து III (B) க்கு 10/2018 கணக்கீட்டு மாதம் முதல் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதும் மனுதாரருக்கு 3.7.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.5** மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 12(1)ன் படி, In the event of any clerical errors or mistakes in the amount levied, demanded or charged by the Licensee, the Licensee will have the right to demand an additional amount in case of undercharging and the consumer will have the right to get excess amount in the case of overcharging, என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே நிலுவை தொகையினை வசூலிக்க எவ்வித காலக்கெடுவும் நிர்ணயிக்கவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.6** எனவே மேற்படி மின் இணைப்பில் பயன்பாட்டு மின்பளு TP.No.1 of 2017 dt. 11.8.2017. 6.2.11 விதியின் படி வீதப்பட்டி IIIA1 ற்கு வரையறுக்கப்பட்ட அதிகபட்ச மின்பளுவான 12 KW க்கும் கூடுதலாக இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதால் TNERC மின்வழங்கல் விதி 5(2)(III)(A) ன் படி கூடுதல் மின்பளுவை முறைப்படுத்தி மேற்படி மின் இணைப்பினை வீதப்பட்டி III(B) க்கு மாற்றம் செய்திடவும், மேற்படி மின் இணைப்பிற்கு முதுநிலை கணக்கீட்டு அலுவலர் / மத்திய அலுவலகம் / மதுரை அவர்களால் 10/2018 கணக்கீட்டு மாதம் முதல் 10/2020 கணக்கீட்டு மாதம் வரை கணக்கிடப்பட்ட ரூ.25,510/– நுகர்வோர் செலுத்த வேண்டும் என மன்றத்தால் உத்தரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து வரும் கணக்கீட்டு மாதங்களுக்கும் வீதப்பட்டியல் III(B) ன் படி வசூலிக்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.7** மனுதாரர் குறிப்பிட்டுள்ள தனது மேல்முறையீட்டு மனுவில் மேற்கோள் காட்டியுள்ள மேல்முறையீட்டு மனு எண் 58/2017 தீர்ப்புரை இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றும்,

ஏனெனில் இவ்வழக்கில் மீட்டரின் CMRI தரவிறக்க பதிவு அறிக்கை பெறப்பட்ட பிறகு தான் மனுதாரரின் மின் இணைப்பில் ஏற்கனவே இரண்டு முறை கூடுதல் மின்பளு பயன்படுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது என்றும், மேலும் கண்டறியப்பட்டதும் மனுதாரருக்கு உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.8** எனவே, மனுதாரரின் மேல் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினால் செலுத்துமாறு உத்தரவிடப்பட்ட தொகையினை செலுத்திடவும், வீதப்பட்டி III(A) லிருந்து III(B)க்கு மாற்றவும் உரிய உத்தரவினை வழங்கிட வேண்டும் என்று எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 18.06.2018 அன்று மின் இணைப்பு எண் 006-010-3393.TF IIIA 1, மின் பளு KW பெற்று கட்டப்பை (Non-oven bags) தயாரிக்கும் தொழிற்சாலை நடத்திவந்ததாகவும், மேற்படி தொழிற்சாலை நான்கு மாதங்கள் மட்டுமே இயங்கியதாகவும், அதன்பிறகு தமிழ்நாடு அரசின் தடை காரணமாக தொழிற்சாலை இயங்கவில்லை என்று தெரிவித்துள்ளார். 12/2018 வரை இருமாதத்திய பயனீட்டளவு 120 யூனிட் முதல் 170 யூனிட் வரை இருந்ததாகவும் , 12/2018-க்கு பிறகு தொழிற்சாலை இயங்கவில்லையெனவும், லைட்டிங் மட்டும் பயன்பாட்டில் இருந்ததாக தெரிவித்துள்ளார். இரண்டு தடவை கூடுதல் மின்ப ளு பயன்படுத்தியதாக கூடுதல் மின்பளு கட்டணம் ரூ .17,807/- செலுத்த சொன்னதாகவும் , தான் மின்சாரம் பயன்படுத்தவில்லையென 21.03.2020 மற்றும் 19.05.2020 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். பிறகு 27.05.2020 அன்று மின் அளவியின் பதிவுகளை பதிவிறக்கம் செய்து (CMRI download data) 10/2018 மாதத்திலேயே 13.08 KW மின்பளு பதிவானதாகவும் , 2018 மாதத்திலிருந்து சுடுதல் மின்பளு கட்டணம் ரூ. 39,459/- செலுத்துமாறு 21 மாதங்கள் கழித்து நோட்டீஸ் கொடுத்திருப்பது மின்வழங்கல் விதி 5(2) III(A) இன் படி தவறு என தெரிவித்துள்ளார் . மேலும் இரண்டாவது தடவையாக மின் பளு கூடிய நிகழ்வுகளுக்குப் பிறகு ஒரு

மாதத்திற்குள் கூடு தல் மின்பளு கட்டணம் வசூல் செய்திருக்க வேண்டுமெனவும் , கூடுதலாக மின் பளு பயன்படுத்தியது குறித்து எந்தவிதமான முன்னறிவிப்பு நோட்டீஸ் தரப்படவில்லையென தெரிவித்து மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் உத்தரவை தள்ளுபடி செய்யுமாறு மேல்முறையீட்டாளர் கோருகிறார்.

7.3 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட 4.95 KW மின் பளுவைவிட அதிகமாக 8/2018 மாத கணக்கீட்டின்போது 14.06KW–ம், 10/2018 மாத கணக்கீட்டின்போது 13.80 kw–ம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை CMRI பதிவிறக்க பதிவுகளின்படி கண்டறியப்பட்டு மீட்டரின் பதிவுகள் பெறப் பட்டதும் அதன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என 11.06.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்துள்ளார். மின் வழங்கல் விதி 5(2)(III)(A)–ன் படியும், வீதப்பட்டி (III) (A) –இல் அனுமதிக்கப்பட்ட மின்பளு தொடர்பாக TNERC–இன் ஆணை T.P. No.1 of 2017 dated 11.08.2017, பத்தி 6.2.11–இன்படியும், மற்றும் MRT அறிக்கையின் அடிப்படையிலும் வீதப்பட்டி (III)(A)(I) –லிருந்து III(B) க்கு 10/2018 கணக்கீட்டு மாதம் முதல் மாற்றம் செய்யப்பட வேண்டுமென 03.07.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார் . மேலும் மின் வழங்கல் விதி 12(1)–இன் படி clerical error இருந்தாலோ அல்லது கேட்பு தொகையில் தவறு இருந்தாலோ கூடுதல் தொகை வசூலிக்க உரிமம்தாரருக்கு உரிமை உள்ளது எனவும், ஆகையால் நிலுவை தொகையினை வசூலிக்க காலக்கெடு இல்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் வரையறுக்கப்பட்ட அதிகபட்ச மின்பளுவான 12KW–க்கும் கூ டுதலாக இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதால் கூடுதல் மின்பளுவை முறைப்படுத்தி வீதப்பட்டி III(B)க்கு மாற்றம் செய்திடவும், 10/2018 கணக்கீட்டு மாதம் முதல் 10/2020 கணக்கீட்டு மாதம் வரை கணக்கிடக்கட்ட தொகை ரூ. 25,510/–ஐ மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டுமெனவும் , தொடர்ந்து வரும் கணக்கீட்டு மாதங்களுக்கும் வீதப்பட்டி III (B)–ன்படி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருமே ஒப்பளித்த (sanctioned demand) மின்தேவையை மிஞ்சிவிட்டால் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி 5(2) (III)(A)–இன் படி உரிமம்தாரர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளனர் . ஆகையால் மின்சார வழங்கல் 5(2)(III)(A) விதியை ஆராய விரும்புகிறேன்.

*"(2) Excess demand charge*

*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be:*

*-*

*(i) ----*

*(ii) ----*

*(III) Where the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times ,-*

*(A) In case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill;"*

7.5 மேற்கண்ட விதியின்படி, பதிவான மின்தேவை 112KW அளவினும் மிகுதியாகாத போது, ஒப்பந்த மின் தேவையைவிட ஒரு நுகர்வோர் அதிமாக பயன்படுத்தும் போது நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்டபிறகு நிலவும் சுமை ஒப்பளிக்கை இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவான மின்தேவைக்கு ஏற்ப மாற்றி விட்டு சுடுதல் சுமை தருவதற்கு விதிக்கப் படும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும் என தெரிகிறது.

7.6 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் 8/2018 மற்றும் 10/2018–இல் அதிகமாக மின்பளு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது . மேற்கண்ட விதியின்படி எதிர்மனுதாரர் முறைப்படி அறிவி ப்பு தந்து 12/2018 முதல் மின்பளுவை மாற்றியமைத்திருக்க வேண்டும் . ஆனால் எதிர்மனுதாரரோ இரண்டு வருடங்கள் கழித்து 03.07.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கண்ட தீர்வின்படி முறையான அறிவிக்கை ஏதுமின்றி மேல்முறையீட்டாளரிடமிருந்து மிகைமின் பளுவி ற்கான கூடுதல் கட்டணம் எதிர்மனுதாரர் வசூல் செய்ய இயலாது என தீர்வு செய்கிறேன் . அவ்வாறு முறைப்படி அறிவிக்கை செய்யாத நேர்வில் ஒப்பளித்த மின்பளு (sanctioned demand ) 4.95 KW ஆகவே தொடர்ந்து இருக்கும் எனவும் , 8/2018 கணக்கீட்டு மாதத்தில் பதிவான மிகை மின்பளு 14.06 KW–க்கும் 10/2018– கணக்கீட்டு மாதத்தில் பதிவான 13.80 KW–க்கும் அந்தந்த கணக்கீட்டு மாதத்திற்கு மட்டும் (excess demand) charge மிகை மின் பளுவிற்கான கூடுதல் கட்டணம் வசூலிக்கலாமென தீர்வு செய்கிறேன்.

7.8 மேலும் ஒப்பளிப்பு (sanctioned) மின்பளு 4.95KW–ஐ மாற்றி பு திய மின் பளுவை முறைப்படுத்தாமல் இருக்கும் நிலையில் அனுமதிக்கப்பட்ட மின்பளு தொடர்பாக TNERC– இன் ஆணை T.P. No.1 of 2017 dated 11.08.2017, பத்தி 6.2.11–இன் படி வீதப்பட்டி IIIA(1) –லிருந்து III(B) க்கு மாற்றம் செய்ய இயலாது என தீர்வு செய்கிறேன்.

7.9 மேற்கண்ட தீர்வுகளின்படி, 10/2018 கணக்கீட்டு மாதம் முதல் 10/2020 கணக்கீட்டு மாதம் வரை கணக்கிடப்பட்ட குறைவுத் தொகை ரூ .25,510 வசூல் செய்யப்பட வேண்டும் என்ற மின்குறைதீர் மன்றத்தின் ஆணை ரத்து செய்தும் அதனை தொடர்ந்து வரும் கணக்கீட்டு மாதங்களுக்கு, வீதப்பட்டி IIIA(1) to III(B) மாற்றம் செய்யாதபட்சத்தில் வீதப்பட்டி III B இன்படி வசூல் செய்ய தடை செய்தும் ஆணையிடுகிறேன்.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7.0 இல் உள்ள தீர்வுகளின்படி 10/2018 கணக்கீட்டு மாதம் முதல் 10/2020 கணக்கீட்டு மாதம் வரை கணக்கிடப்பட்ட குறைவுத் தொகை ரூ . 25,510/– வசூல் செய்யப்பட வேண்டும் என்ற மின்குறைதீர் மன்றத்தின் ஆணை ரத்து செய்யப்படுகிறது. அதனை தொடர்ந்து வரும் கணக்கீட்டு மாதங்களுக்கு வீதப்பட்டி III(B)–இன்படி வசூல் செய்ய தடை விதிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 15/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
"No Consumer, No Utility"

<u>பெறுநர்</u>
1. திரு. M. ஷாஜஹான்,
பிளாட் எண். 12A, வில்லாபுரம் ஹவுசிங் போர்டு,
வில்லாபுரம், மதுரை – 12.

2. செயற்பொறியாளர்/மேற்கு/பெருநகர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அரசரடி துணை மின் வளாகம்,
AA ரோடு, அரசரடி, மதுரை – 625 016.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K.புதூர், மதுரை – 625 007.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்கா க
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.